ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

ஜூன் Vol. 6 No. 6 1952

சீதபேதி	....	2
மலடு	....	7
ஹோமியோபதியின் வாடிய முகம்	....	10
கேள்வியும்—பதிலும்	....	14
ஹோமியோபதியின் சாரம்	....	17
ஹோமியோபதியின் வேதாந்தம்	....	22

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் கும்பகோணம்

சீதபேதி

S திருஞானம் M. I. H., ஞானவல்லி ஹோமியோ வைத்தியசாலை,
உடையார்க்குடி

சீதபேதி நம் நாட்டில் அதிகமாகப் பரவி வரும் தொத்துநோய்களில் ஒன்றாகும். இவ்வியாதி குளிர்நாடுகளைவிட உஷ்ணப் பிரதேசங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றது. இது அமீபா, பாஸிலா என்று சொல்லப்படும் இருவகைக் கிருமிகளால் உண்டுபண்ணப் படுகிறது. ஆகாரம் குடிதண்ணீர் இவைகளின் வழியாக டி கிருமிகள் தேகத்தினுள் செல்லுகின்றன. இக்கிருமிகளால் பெருங்குடலில் உள்ள சளி ஜவ்வில் அழற்சி ஏற்பட்டு, புண் உண்டாகி சீதபேதி ஏற்படுகின்றது. மூலக்கடுப்பு, வயிற்றுவலி, சுரம் இவைகளுடன் ரத்தமும் சீதமும் கலந்த பேதியுடன் திடீரென்று ஆரம்பிக்கும். குடலில் அழற்சி ஏற்பட்டவுடன் சளி ஜவ்வு துண்டு துண்டாக வெட்டித் தள்ளப்பட்டு மலத்துடன் அடிக்கடி வெளியாகும். வயிற்றுக் கடுப்பினால் மலம் வெளி வராவிட்டாலும் ஒரு சொட்டு சீதமும் ரத்தமும் வெளியானாலும், மலம் போகவேண்டும் என்கிற உணர்ச்சியும் பிரயத்தனமும் ஓயாமல் இருந்துகொண்டே இருக்கும். வெளிக்குப்போக உட்கார்ந்தால், பின்னர் எழுந்து கால் அலம்புவதற்கு மனமில்லாமல் மீண்டும் வெளிக்குப்போகவேண்டும் என்கின்ற உணர்ச்சியுடன் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருக்க நேரிடும்.

நோய் அதிகரிக்க அதிகரிக்க இரத்தம் வெளியாவதும் அதிகப்பட்டு குடலிலிருந்து சீதமும் அதிக துர்நாற்றத்துடன் வெளிப்படும். இத்துடன் டி கிருமிகளால் ஏற்படும் விஷ சத்துக்கள் இரத்தத்துடன் கலந்து, தலைவலி, வாந்தி, குமட்டல், மயக்கம் முதலியவற்றையும் உண்டு பண்ணும். இயற்கையில் காரமாக உள்ள உமிழ்நீர் காடியாக மாறுகின்றது. இரைப்பையிலிருக்கும் நீர் காடி நிலையிலிருந்து கார நிலைக்கு மாறி விடுகிறது. சிறு குழந்தைகளுக்கு நாள்பட்ட சீதபேதியின் காரணத்தால் குடல் அழற்சியுற்று தளர்ந்து முக்கி மலம் கழிக்கும்போது அடிக்குடல் மலத்துவாரத்திற்கு வெளியே தள்ளிவரும். சில சமயங்களில் உள்ளே போகாமல் அப்படியே தங்கிவிடும். அப்பொழுது குழந்தையை அதன் இடுப்புவரை இள வென்னீரில் 10 நிமிஷ நேரம் உட்காரவைத்து நமது உள்ளங்கையில் மிருதுவான பஞ்சை வைத்துக்கொண்டு குடலை உள்ளே

தள்ள வேண்டும். குடல் உள்ளே சென்றபின் வெளிவராமல் பஞ்சை வைத்து மூன்று அங்குலம் அகலமுள்ள துணியால் கோவணம்போல கட்டவேண்டும். சிலருக்கு சீதபேதியுடன் குளிர் காய்ச்சலும் ஏற்படும் சீதபேதிக்கு செய்யவேண்டிய சிகிச்சையுடன் முறைக் காய்ச்சலுக்கும் வைத்தியம் செய்யவேண்டும்.

ஆகாரம்

நோயாளியை காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள அறையில் கட்டிலில் படுக்கவைக்க வேண்டும். நோயாளியின் மலம் சிறுநீர் முதலியவற்றை மலப்பீங்கானில் கழிக்கும்படி செய்யவேண்டும். தினந்தோறும் ஆடைகளையும் கட்டிலின்மேல் இருக்கும் விரிப்புகளையும் மாற்றவேண்டும். பேதி அதிகமாக இருப்பதால் உடலுக்கு தண்ணீர் மிகவும் தேவையாக இருக்கும். ஆகையால் நன்றாக கொதித்து ஆறிய தண்ணீரை கொஞ்சங் கொஞ்சமாக கொடுகக வேண்டும். பார்லி அரிசி கஞ்சி, புழுங்கல் நொய் கஞ்சி இவைகள் நல்ல ஆகாரமாகும். முட்டையின் வெண் கருவை தண்ணீரில் அடித்து குளுகோஸ் சேர்த்துக் கொடுக்கலாம். பேதி குறைய குறைய அரிசி கஞ்சி, ஜவ்வரிசி கஞ்சி, மோர், பழரசம் முதலியவைகளை கொஞ்சங் கொஞ்சமாக சேர்த்துக் கொடுக்கலாம்.

சிகிச்சை

அகோனைட்:— வியாதியின் ஆரம்பத்தில் இரத்தமும் சீதமும் கலந்த மலம். அடிக்கடிபோதல், மலம் வெளியேறும்போது அடி வயிற்றில் வெட்டும் வலி. மயக்கம், சாவுபயம்.

ஆலோ சகோட்ரினு:— இரத்த மயமான மலம். கொழுப்புபோன்ற பதார்த்தம் கலந்திருத்தல். குடலில் இரைச்சல். அபானவாயு அல்லது மூத்திரம் வெளியேறும்போது தன்னறியாமலே மலம் கழிதல். அடி வயிற்றில் நெருக்குவது போன்ற வலி. உடம்பை மடிப்பதால் சமனம்.

ஆர்னிகா:— அடிபட்டதினுல் ஏற்பட்ட சீதபேதி. சீதமும் இரத்தமும் கலந்த வயிற்றுக் கடுப்பு. வாய் கசப்பு. அழுகிய முட்டையின் நாற்றம் உள்ள மலம்.

அர்ஜண்டம் நைட்ரிகம்:— மலம் பச்சை நிறம். அல்லது மலம் வெளியேறிய சில நிமிஷத்தில் பச்சை நிறமாக மாறுதல். வலி

யில்லாத சீதம் கலந்த மலம். குடலில் புண் இருக்கிறது போன்ற சந்தேகம் உள்ள சீதபேதி.

ஆர்சனிகம்:— இரத்தம் கலந்த கறுப்பு நிறமுள்ள மலம். தன்னறியாமலே மலம் போதல் அபானத்தில் எரிச்சல் அமைதியின்மை. அதிக தாகம். கொஞ்சங் கொஞ்சமாக அடிக்கடி தண்ணீர் குடித்தல் அல்லது சாப்பிட்டவுடன் மலம் போதல்.

பெல்லடோன்னு:— கொஞ்சம் இரத்தம் கலந்த பச்சை நிறமுள்ள மலம். மலம் வெளி வருவதற்கு முன்னும் பின்னும் கடுப்புவலி. அடிவயிற்றில் மின்னுவதுபோல் வலி தோன்றி மறைதல். தாகம் இருக்காது, வாயும் தொண்டையும் காய்ந்திருக்கும்.

பிரயோனியா:— உடலில் மிகுதியான உஷ்ணத்தினும் அல்லது உஷ்ணமான சமயத்தில் குளிர்ந்த பானங்கள் அருந்தியதினுலும் ஏற்படுவது. வெட்டும் வலியுடன் கூடிய மெல்லிய இரத்தம் கலந்த மலம். படுக்கையில் உட்கார்ந்திருக்கும்போது ஓக்காளமும் வாந்தியும். நோயாளி அமைதியாய் இருக்க பிரியப்படுவான்.

கந்தாரிஸ்:— வெண்மையான அல்லது இரத்தம் கலந்த சாம்பல் நிறமான மலம். மலம் வெளியேறும் சமயத்திலும் பின்பும் அபானத்தில் எரிச்சல். அடிக்கடி சிறுநீர் பிரியும் உணர்ச்சி வலியுடன் கொஞ்சங் கொஞ்சமாக பிரிதல். வாய் காய்ந்தும் எரிச்சலுடனும் இருக்கும். கடுமையான சுரமும் இருக்கும்.

கார்போ வெஜிடாபிலிடிஸ்:— நீடித்த வியாதிக்குப் பிறகு ஏற்படக் கூடியது. ஆசனவாயில் அரிப்பும் எரிச்சலும் உள்ள துர் நாற்றமும் உள்ள மலம். தலை சூடாகவும் கை கால் சில்லிட்டும் இருக்கும். குளிர்ந்த சுவாசத்துடன் தனக்கு விசிறும்படி சொல்வார்.

சாமோமில்லா:— மலம் கொஞ்சமாகவும், அடிக்கடியும் பச்சையாகவும், அல்லது வெண்மையாயும் அழுகிய முட்டையின் நாற்றத்துடனும் கூடிய மலம். மலம் வெளியேறும்போதும், முன்பும் வயிற்றில் வலி. குழந்தைகளுக்கு பல் முளைக்கும்பொது ஏற்படும் சீதபேதிக்கும் சிறந்தது.

சைனு:— பலஹீன முள்ளவர்களுக்கும், உடம்பிலிருந்து அதிக தாதுநீர் வெளியேற்றப் பட்டவர்களுக்கும் அத்தியாவசியமானது.

சாக்கலேட் நிறமாயும் அழுகிய நாற்றத்துடனும் உள்ள மலம். மலம் வெளியேறுமுன் வலி. வயிற்றை மடிப்பதால் சமனம். சாப்பிட்ட வுடனேயும் இரவிலும் அதிக வயிற்றுப்போக்கு.

கோல்சிகம்:— பகல் உஷ்ணமாயும் இரவு குளிர்ச்சியாயும் உள்ள காலத்தில் ஏற்படும் சீதபேதி. இரத்தம் கலந்த சீதத்துடன் பளபள வென்றிருக்கும் மலம். அதிக வலியுடனும் முக்கலுடனும் வெளி யாகும். சிலசமயம் இரத்த மயமான மலம் வலியில்லாமல் போகும்.

காலோஸிந்திஸ்:— கடுமையான வயிற்றுவலியுடன் கூடிய இரத்த மும் சீதமும் கலந்த மலம். மலம் வெளியேறுமுன் அடிவயிற்றில் கடுமையான வெட்டும் வலி; வயிற்றை மடிப்பதால் சமனம். பழம் அல்லது ஆகாரம் சாப்பிட்டவுடன் மலம் போகுதல்.

டல்கமாரா:— குளிர் காலத்தில் ஏற்படும் பச்சை நிறமான கோழையுள்ள மலம். சர்மம் வறண்டும் உஷ்ணமாயும் அதிக தாகத் துடனும் இருப்பர். குளிர்ச்சியினால் நோய் அதிகப்படும்.

இபிகாக் உ:— அதிக குமட்டல் வாந்தியுடனும் கடுப்புடனும் பூந்தசைகளுடன் பச்சையாக வெளியாகும் மலம். அடிவயிற்றில் நெருக்கும் வலி. எந்த ஆகாரத்திலும் வெறுப்பு.

மெர்க்கூரியஸ் கரோசிவஸ்:— கடுமையான சீதபேதிக்கு ஏற்றது. சுத்த இரத்தம் அல்லது சீதகம் கலந்த இரத்தத்துடன் கூடிய மலம். அடிவயிற்றில் வெட்டும் வலி. சிறுநீர் இரத்தமாயும், குறைவாயும், கடுப்புடனும் இறங்குதல். அபானத்தில் தாங்கமுடியாத கடுப்பு. அடிக்கடி மலம் வெளியேற வேண்டும் என்ற உணர்ச்சி.

மெர்க்கூரியஸ் சொலுபுலிஸ்:— சீதகம் கலந்த இரத்தம் அல்லது பச்சை நிறமான மலம். அபானத்தில் கடுப்பும் எரிச்சலும், அபானம் வெளித்தள்ளுதல். அதிக நேரம் உட்கார்ந்திருக்க வேண்டியிருந்தும் மலம் சிறிது தங்கியிருக்கும் உணர்ச்சி. இரவில் தொந்தரவு அதிகம்.

நக்ஸ்வாமிகா:— இரத்தத்துடன் கூடிய குறைவான மலம். மலம் வெளியேறும்போதும், முன்பும் அதிகக் கஷ்டம் மலம் வெளியேறிய வுடன் கஷ்டம் குறைதல். அடிக்கடி மலம் போகவேண்டும் என்ற உணர்ச்சி. முதுகுவலி இருக்கும். நோயாளி தனித்திருக்க நினைப்பர்.

பாஸ்பரஸ்:— இரத்தம் கலந்த பச்சை நிறமான மலம். ஆசான வாய் திறந்திருக்கும் உணர்ச்சி. சிறுநீர் எரிச்சலுடன் அடிக்கடி

வெளிப்படல். குளிர்ந்த தண்ணீர் குடிக்க பிரியம். வயிற்றில் தண்ணீர் சூடாக்கப்பட்டவுடன் வாந்தி.

போடோபில்லம்:— இரத்தமாயும், பச்சை நிறமுள்ள கோழையாயும் அல்லது கொழுப்பு கலந்த கோழையாயும் இருக்கும் மலம். வலியில்லாமல் மலம் வெளியேறும். அபானம் அடித்தள்ளல். குடலில் கடபுடா சப்தம்.

பல்ஸடில்லா:— இரத்தக் கோடுள்ள சீதகத்துடன் கூடிய மலம். மலம் போவதற்கு முன் வயிற்றில் வலி. நாக்கில் கசப்புடன் தடித்த மஞ்சள் நிறமான மாசு படிந்திருத்தல்.

ரஸ்டாக்ஸ்:— சிவந்த அல்லது வெண்மையான சளிபோன்ற மலம் மலம் வெளியேறும் போதும் முன்பும் வெட்டும் வலி. வலியுடன் நாற்றமுள்ள மலம். அசைவதினாலும் வெளிக்கிருந்த பிறகும் வலி சமனம்.

ஸல்பர்:— மலம் இரத்தமாயும் பச்சையாயும் அல்லது வெண்மை சீதகமாயும் இருக்கும். ஆசனவாய் சிவந்திருத்தல். எரிச்சல் வலி. மலம் வெளியேறும் போது அதிகவலி. வெளிக்கிருந்தவுடன் முக்கல். அடிவயிற்றில் புண் இருப்பது போன்ற உணர்ச்சி.

குறிப்பு:— மேற்கண்ட ஔஷதங்களின் குணங்களுடன் நோயாளியின் குறிகளை ஒத்திட்டுப் பார்த்து தகுந்த மருந்தை தேர்ந்தெடுத்து கொடுத்தால் ஆச்சரியமான பலனை அடையலாம்.

ஹோமியோபதி அசோசியேஷன்

நெல்லை ஜில்லாவில் சூரண்டை என்னும் ஊரில் ஸ்ரீமான்கள் எஸ். ஆர். பி. துரைபாண்டியன், கே. வி. சௌந்தரபாண்டியன், அருணகிரி பண்டிதர், சங்கரன் செட்டியார், ஸ்ரீமதி. சிவஞான சுந்தர நாச்சியார் முதலியோர்கள் சேர்ந்து ஒரு ஹோமியோபதி அசோசியேஷன் நிறுவ ஏற்பாடுகள் நடத்தி வருகிறார்கள் என்பதை அறிய மெத்த மகிழ்ச்சியடைகிறோம். விரைவினில் அசோசியேஷன் நிறுவப்பட்டு அது அனேக ஹோமியோபதியர்களுக்கு நல்ல பலன் அளிக்கும் முறையில் உழைக்கும் என்று நம்புகிறோம்.

மலடு

By Dr. Moses Paul. M. L. H. B.

மலடு !

"கலியாணம் ஆகி பலவருஷங்கள் ஆகியும் குழந்தைக்குட்டியைக் காணோம். மலட்டுக்கழுதையை கட்டி மாரடிக்க வேண்டியதிருக்கிறது. இவளை துலேத்துவிட்டு மறு கல்யாணம் செய்ய வேண்டியதுதான்." இவ்விதக் கூக்குரல் நம் நாட்டில் சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது. கணவன் மட்டும் இவ்விதம் திட்டினுல் போதாது என்று மாமன், மாமி, நாத்தனுர் யாவரும் தூற்ற ஆரம்பிக்கிருர்கள். இவற்றை சில பெண்கள் விதியை நொந்து வருந்துகிருர்கள். இங்நிலேயில் சமுதாயமும் தூற்ற ஆரம்பிக்கிறது. இங்நிலேயை நீடிக்கவிரும்பாமல் சில பெண்கள் தாயகம் செல்கிருர்கள், சிலர் மரண தேவதைக்கு தன்னை ஒப்புவிக்கிருர்கள் இப்பிரகஸ்பதி மறுவிவாகம் செய்கிருர். ஆம்: குழந்தை இல்லை என்பதற்காக மறுமணம் செய்கிருர். முதல் மனைவி புழுவென துடிக்கிருள். புதிதாக வந்தவளும் மலடே. உண்மையில் மலடு யார்...........?

மலட்டுத்தன்மை பெண்ணினத்தைவிட ஆணினத்திடம்தான் பெரும்பாலும் காணப்படுகிறது. மணமுடிந்து ஆண்டு பல கழிந்தும் இதுவரை கர்ப்பத்தடை சாதனங்கள் எதுவும் உபயோகியாமலிருந்தும் கரு தரிக்கவில்லை என்ருல்தான் மலட்டுத் தன்மையைப்பற்றி ஐயுரலாம். இச்சந்தேகம் வெற்றிபெறுங்கால் ஆணின் உடம்பையே பரிசிலனை செய்யவேண்டும். குறை காணுவிடின் தான் பெண்ணின் தேகத்தை சோதிக்க வேண்டும். மலட்டுத் தன்மை நிவர்த்திக்க கூடியதாகவும் இருக்கலாம். அன்றில் நிவர்த்திக்க முடியாமல் நிரந்தரமாகவும் இருக்கலாம்.

மலட்டுத்தன்மை ஆண்களுக்கு எங்கனம் பீடிக்கிறது என்ருல், இது பரம்பரையாக உள்ளது என கூறுவதற்கில்லை. ஏனெனில் மக்கட்பேறு நிறைந்த குடும்பங்களில் பிறந்தவர்களுக்குக்கூட மலட்டுத் தன்மை இருக்கக்கூடும். ஆகவே பிறவிக்கோளாறினுல் ஜனனேந்திரிய உறுப்புக்கள் சரியாகயில்லாதிருந்தால் மலட்டுத்

தன்மை இருக்கலாம், ஆனாலும் இதுதான் தக்க காரணம் என கூறுவதற்கில்லை. வயது வந்த எந்த ஆண்மகனுக்கும் தந்தையாகும் இயற்கையின் சக்தி தொன்று தொட்டு ஏற்பட்டுள்ளது. இதை இயற்கை எனவும் கூறலாம். மலட்டுத் தன்மையை ஆராய்வதற்கு அவனது ஜீவதாதுவில் கருதரிக்கச் செய்யும் உயிரணுக்கள் எவ்விதம் இருக்கின்றன என்பதை நாம் முதலில் அறியவேண்டும். இதை பூதக்கண்ணாடியின் உதவியால் நன்கு அறிந்து கொள்ளலாம். கெட்டுப்போன ஜீவதாதுவில் உயிரணுக்கள் குறைந்திருக்கலாம், அன்றில் இல்லாமலிருக்கலாம் உடம்பிற்கு சரியான போஷணை சத்து போதிய அளவு கிட்டாவிடின், தாது நீர்த்து. ஜீவ அணுக்கள் அற்று மலட்டுத் தன்மை வரக்கூடும். உயிரணுக்கள் போதிய அளவு இல்லையானால், ஹார்மோன்ஸ் (HORMONES) அணுக்களை உடம்பில் சிறிது சிறிதாக ஊசி மூலம் செலுத்தி தாதுவை உயிர் பெற செய்யலாம்.

(MUMPS)

அம்மன்கட்டு (பொன்னுக்கு வீங்கி) எனும் கன்ன வீக்க நோயினால் மலட்டுத்தன்மை ஏற்படலாம். இந்த நோய் 15 வயதிற்குள்ளாகவே பெரும்பாலும் ஏற்படுகிறது. அம்மை நோயைப்போல் ஒரு தடவை வந்தால் அநேகமாக மறு தடவை ஏற்படாது. இந்த நோய் எவ்விதக் கோளாறும் இன்றி மறையவும் கூடும். அன்றின் பீஜங்களில் கொதிப்பை ஏற்றி தாது சுரப்பிகளை சீர்கேடடையச் செய்யவும் கூடும். இதனாலும் மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. 15 வயதுக்குமேல் அம்மன் கட்டு ஏற்பட்டால் மிகவும் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். அதிக உழைப்பை நீக்க வேண்டும். ஜலதோஷம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இன்றில் பீஜம் கொதிப்படைந்து மலட்டுத்தன்மை ஏற்படுவது நிச்சயம். இதைப்போன்றுதான் நீண்டநாள் மலேரியா; இன்புளுயன்ஸா; அம்மை; மூளை-முதுகெலும்பைத்தாக்கும் ஜுரங்கள் முதலியனவும் ஜீவதாதுவை கொன்றுவிடும். மேலும் மதுசாரம்; மார்பியா; கஞ்சா முதலிய விஷசத்துக்கள் உடம்பில் அதிகப்படியாக கலந்துவிட்டாலும், புகைபிடித்தல் மிதமிஞ்சினாலும் ஜீவதாது வளம் குன்றி மலட்டுத்தன்மை ஏற்படும்.

ஜனனேந்திரிய உறுப்புகளில் மேககிரந்தி (SYPHILIS) வெட்டை, வெள்ளை (GONORRHOEA) போன்ற மேக சம்பந்தமான வியாதிகள் வந்தாலும், அதன் காரணமாக தாது;

சுரப்பியும், பீஜவித்துக்களும் கேடடைந்து மலடாகக் கூடும். மேலும் இம்மாதிரி நோயுள்ளவர்கள் தம் மனைவிக்கும் இக்கொடிய நோயை கொடுத்து அவளை மலடாக்கக்கூடும். பீஜகொதிப்பினால் உயிரணு அற்றுப்போனால் அதை மீண்டும் அடைவது சாத்தியமன்று. தவிர தாதுக்குழாய்களில் அடைப்பு இருந்தாலும் உயிரணு வர இயலாமற்போகும். ஒருகால் இவ்வுயிர் அணு மடியவும் கூடும். தாது இயற்கையில் காரசத்து (ALKALI). இக்காரசத்து சிறுநீர் கோளாறினால் உண்டாகும் அமிலசத்து (ACID) இவ்வற்றை சக்தி அற்றதாக்கிவிடும். இக்ககரணத்தாலும் கருதரிக்க இயலாமற்போகும். இதை சிறுநீரை (URINE) சோதித்து நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும்.

தற்புணர்ச்சியினாலும் மலடாகக்கூடும். ஜீவதாதுக்கள் இப்புணர்ச்சியினால் வியர்த்தமாகிவிடும். மேலும் மூளை, நரம்பு மண்டலங்களும் கேடடைந்து அதனால் மலடாகக்கூடும்.

மேற்காட்டிய காரணங்கள் பெரும்பாலும் ஆணினத்தையே பாதிப்பதால், மலடு பெண்ணினத்தைவிட ஆணினத்திடமே அதிகமாக நிறம்பியுள்ளது என்பது நன்கு விளங்கும். இவ்வாறிருக்க பெண்களை குறைகூறிக்கொண்டு மறுமணம் செய்யும் தோழர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள்? என்பதை சற்று சிந்தியுங்கள்.

இக்கொடிய நோயை ஹோமியோபதி முறைப்படி ஓரளவு குணப்படுத்த முடியும். அக்கைங்கரியத்தை செய்துமுடிக்க, நம் சிந்தனைக்கு விருந்தளிக்கவேண்டும். ஆம், தகுந்த மருந்தை நமது மெட்டீரியா மெடிக்காவிலிருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். அவ்வாறு கண்டடைந்த மருந்தினால் மலடு என்னும் கொடிய நோயை நிச்சயமாக விரட்டியடிக்க முடியும்.

ஆஸ்பத்திரி திறப்பு விழா

மதுரை ஜில்லா சித்தயங்கோட்டை என்னும் ஊரில் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டில் பயிற்சி பெற்ற **டாக்டர் கே. எம். ராஜா முகம்மது எம். ஐ. எச்.** அவர்கள் 26—5—1952 முதல் "ஜெர்மன் ஆஸ்பத்திரி" என்னும் பெயரில் வைத்திய சாலை ஆரம்பித்திருக்கிறார் என அறிகிறோம்.

''ஹோமியோபதி''யின் வாடியமுகம்

(V. R. ரமணி, கோலா லங்காட், டெலுக்டத்தோ, மலேயா)

ஹோமியோபதி மாத சஞ்சிகை உயர்திரு. ஆசிரியர் டாக்டர் V.R. மூர்த்தி அவர்களால் எனக்கு அனுப்பப்பட்ட ஜனவரி-மீ முதல் மே-மீ வரை உற்ற எல்லா இதழ்களும் கிடைக்கப்பெற்றேன். அஃதின் சார்பாக எனது நன்றியையும், வந்தனத்தையும் செலுத்த கடமைப்பட்டவன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புத்தகம் கிடைத்ததும் வெகு ஆவலுடன் படித்து சாராம்சத்தை விளங்கிக் கொண்டதோடு, உயர்திரு. டாக்டர் V. R. மூர்த்தியின் உயர்ந்த பணியை மிகவும் மெச்சுகின்றேன்.

காரணம் ஏழைமக்கள் மலிந்த நமது தென் இந்தியாவில் சொற்ப சிலவிலும், உகந்த முறையிலும் வியாதியை நீக்கிக்கொள்ள ஹோமியோபதி வைத்திய முறையை நிலைநாட்டி வெற்றிச்சங்கு ஊதுவது ஏழைகளின் காதுக்கு இனிமையாக இருக்குமென்பது திண்ணம். மிராஸ்தார்களுக்கும் மிகவும் வறுமையுடன் வாழ்க்கை நடத்தும் கிராமவாசிகளுக்கும் இந்த ஹோமியோபதி வைத்தியமே சிறந்தது என பெருமையுடன் பகர்கின்றேன். பாட்டாளி மக்களால் அதிக விலை கொடுத்து அல்லோபதி மற்றும் நாட்டு வைத்தியமும் செய்துகொள்ள முடியுமா? ஒருகாலும் முடியாது. ஆகவே இந்த ஓர் ஸ்தாபனம் நமது வறுமைக்குத் தக்கவாறு உதவி உலாவிவருவது தென் இந்தியாவில் வதியும் எல்லார்க்குமே ஓர் வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது. இவ்வளவு முக்கியமான ஸ்தாபனம் ஒன்று இருந்தும், அதில் வகிக்கும் ஹோமியோபதி சகோதர சகோதரிகள் பாராமுகமாக இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

விஞ்ஞான முறையிலும், மற்றும் எல்லா துறைகளிலும் வரம்பு கடந்த இந்த நிகழ்கால உலகில், நமது ஹோமியோபதி சகோதர சகோதரிகள் வாடிய முகத்துடன் காட்சியளிப்பது, நமது ஐக்கிய இன்மையையும் முயற்சியற்ற தன்மையையும் குறிக்கிறது. ''பருவத்தே பயிர்செய்'' என்பதற்கு ஒப்ப இந்த அரியகாலத்தை வீணுக்காமல், ஹோமியோபதி அன்பர்கள் எல்லோரும் செழித்த முகத்துடன் விழித்து எழுந்து ஒவ்வொரு நுண்ணிய காரியங்களிலும் சிறத்தை கொண்டு விடாமுயற்சி செய்து நமது ஹோமியோபதி

வழிப்பாட்டை நிலைநாட்ட முயலவேண்டுமென்பது என் பெருஅவாவுடன் அன்பர்கள் எல்லோரும் மனமுவந்து உதவ முன்வர கோருகிறேன்.

1950-ம் ஆண்டு, நான் இந்தியாவில் இருந்த சமயம் ஹோமியோபதி ஆண்டுமலர் ஒன்றைக் கண்ணுற்றதுண்டு. அவ்வமயம் அது (ஹோமியோபதி மலர்) அனேக படங்களுடனும், கட்டுரைகளுடனும் மலர்ந்த முகத்துடன் காட்சியளித்து, தலை நிமிர்ந்து நின்றது. ஆனால் இன்று ஓர் சொற்ப காலத்திற்குள் மிகவும் சிறிய புத்தகமாக வாடிய முகத்துடன் காட்சியளிப்பது எனக்கு மிகவும் விந்தையாகவும், வியப்பாகவும் இருக்கிறது. இஃதை நோக்குங்கால் நமது ஹோமியோபதி அங்கத்தினர்களாகிய சகோதர சகோதரிகள் போதிய ஆதரவு கொடவில்லை என்பது வெள்ளிடைமலை. ஆகவே தென் இந்தியாவிலும் மற்றும் மலாய்நாடு, சிலோன் இவைகளில் வதியும் சகோதர சகோதரிகளுக்கு மிகவும் நெருங்கியதும், பிரக்யாதி வாய்ந்ததுமான கும்பகோணம் ஹோமியோபதி நிலையத்தை தலைமை ஸ்தாபனமாகக் கருதி, அது மலர்ந்த முகத்துடன் எழுந்து, மார்பு தூக்கி, பயமற்று உலகின்கண் உலாவ எல்லா துறைகளிலும் உதவ அன்பர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

''சிறுதுளி பெருவெள்ளம்'' என்பதற்கு ஒப்ப நாம் நம்மால் முயன்ற சிறிய பொருள் உதவியைச் செய்தோமானால், அது (ஹோமியோபதி வைத்திய முறையும், மலரும்) மிகவும் வலிமையடைந்து வாடியமுகம் செழித்து; நம்மில் உற்ற எல்லா குறைபாடுகளையும் நீக்கி, நம் அரசாங்கத்தினரிடமிருந்து நமக்கு வேண்டிய உரிமைகளைப் பெற இலகுவாக இருக்குமென்பது தெள்ளென விளங்க வில்லையா?

நாமும் அந்நியனைப்போல் புன்னகை முகத்துடன் மலர்மாலை சூடி, தலை நிமிர்ந்து, மார்பு தூக்கி, பலம் வாய்ந்து உலகின்கண் உலாவும் நன்நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

வாடியமுகம் மலர ஹோமியோபதி சகோதர சகோதரிகளின் விடாமுயற்சியில் இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். மலரை வாடவிட வேண்டாம்.

கூடிய விரைவில் வெளிவருகிறது!

ஹோமியோபதி ரெப்பர்ட்டரி

(தமிழில்)
(வைத்தியக் களஞ்சியப் பகுதி)

(டாக்டர் V. R. மூர்த்தி அவர்களின் மெடீரியா மெடிகாவிற்குத் தகுந்தபடி)
தூக்கநாயகன்பாளையம்
டாக்டர் C. R. வெங்கடேச செட்டியார்
அவர்களால் தொகுக்கப்பட்டது.

பல வருடங்கள் உழைத்து ஒவ்வொரு ஹோமியோபதி டாக்டருக்கும் உபயோகப் படக்கூடிய ஒரு புத்தகம் உருவாகிறது.

சுமார் 400 முதல் 500 பக்கங்கள் வரை விலை ரூ. 10

1952-ம் ஷ செப்டம்பர்-மீ 1உ வெளிவரும்

குறிப்பு: இப்பொழுதே ரூ. 5/- முன்பணம் அனுப்பி ரிஜிஸ்டர் செய்து கொள்பவர்களுக்கு மாத்திரம் (Pre-publication) விலை ரூ. 8/-

காபிரைட் பிரசுரம்:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் ::: கும்பகோணம்

★ இ ரெப்பர்ட்டரியின் ஒரு பக்கத்தை எதிர்புரத்தில் காணவும்

மூத்திரம் (*தொடர்ச்சி*)

கொஞ்சமாய்: அக்டியா ரேஸி., அடோனி வர்., அபிஸ்மெல்., ஆலோ, அபொஸினம், கன்வலேரியா, கார்டுஸ் மரி., டிஜிடாலிஸ், நக்ஸ் மாஸ்., பாப்டீஷியா, பிக்ரிக் ஆசிட், பிரையோனியா, பைடோலக்கா. பைரோஜன், லாச்சஸிஸ், ஸ்கல்லா ஸ்ட்ராமோனியம், ஸெனகா, ஸெனஸியோ, ஹையாஸ்யாமஸ், ஹெல்லிபோரஸ்.

சொட்டுச் சொட்டாக: அகோனைட், அலுமினா, கன்னபிஸ் ஸடைவா, காம்போரா, டல்கமாரா, கார்பன் ஸல்ப், பிக்ரிக் ஆஸிட், பிளம்பம், பென்ஸாயிக் ஆஸிட், மெக்னிஷியா மூரி., மெர்கூரியஸ் கரோ. ஸ்டாபிஸாக்ரியா. ஸபீனா.

சொட்டுச் சொட்டாக, வயதானவர்களுக்கு: கோனியம்.

ஒழுகிக்கொண்டே இருத்தல்: எக்விஸிடம், ஐயோடியம், கோல்சிகம், பெல்லடோன்னா, யூரேனியம் நைட்ரிகம், யூபடோரியம் பர்போலியேடம், யூவா உர்ஸி, ஸெலீனியம்.

முக்கி மூத்திரமிடல்: அலுமினா, கோனியம், ப்ரீரா பிரவா, மெக்னிஷியா மூரி, வலேரியானா.

முக்கினாலும் வராது: ஓபியம், ஸரஸபரில்லா.

தெரியாமல்: அர்ஜண்டம் நைட், ஆலோ, ஓபியம், காலி பாஸ், காஸ்டிகம் நேட்ரம் மூரி, பெர்ரம், ஐயோ, மூரியாடிக் ஆஸிட், யுரேனியம் நைட், ரூடா, லாரோஸிராஸஸ், ஸிலிகா, வெராட்ரம் ஆல்பம், ஸ்பாஞ்சியா, ஸெலினியம்.

சதா தெரியாமல் போதல்: பெர்ரம் மெட்.

தெரியாமல் போதல், இரவுகளில்: ஸல்பர்

ஓடும் ஜலத்தைப் பார்த்தால் போதல்: ஹையாஸ்யாமஸ்.

கேள்வியும் — பதிலும்

J. N. R. மூர்த்தி, கோட்டார்

"இந்தியன் இன்ஸ்டிட்யூட்டில் ஒரு வருடம் படித்து M.I.H. டிப்ளமா பெறுகிறோம். அதுபோல் மதராஸிலும் நடக்கிறது. இதைத் தவிர சிற்சில இடங்களில் அதாவது கல்கத்தா, சிம்லா என்ற இடத்தில் ஒரு பாடமும் அனுப்பாமல் ரூ. 6 அனுப்பினுல் ஒரு டிப்ளமா M. D. H. அனுப்புகிறார்கள். இதுதான் ஹோமியோ பதியை அரசாங்கத்தார் அங்கீகரிக்காத காரணம், M. D. H. பட்டதாரிகள் தாங்கள்தான் பெரியவன் என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவும்."

ரூபாய் ஒன்றேகாலுக்கு கெடிகாரமும், ரூ. 10-க்கு சினிமா மெஷினும், மற்றும் இதுபோல் பல போலி சாமான்களை விளம்பர மூலம் விற்றுத் தொழில் செய்வதில் வடநாட்டில் பல நிபுணர்கள் இருக்கின்றார்கள். இது போலவே ரூ. 6-க்கு டிப்ளமா விற்கிறார்கள் போலும்! ஒரு வருடம் சிரமப் பட்டுப் படித்து பரீட்சையில் பாஸ் செய்து பட்டம் பெறுபவரைவிட யாதொரு சிரமமில்லாமல் பட்டம் பெற்றவர் உயர்ந்தவராக மாட்டாரா? ஆனால் பாவம் அவருக்கு அறிவு மாத்திரம் இருக்காது! அறிவு இருந்தால் இவ்வாறு ஏய்க்கப்படுவாரா?

ரா. அன்புவேல், மதுரை

சமீபத்தில் நடந்த திருச்சி மஹாநாட்டில் சொற்பொழி வாற்றிய ஒருவர், நமது 'ஹோமியோபதி'யில் வெளியான மஹாநாடுகள் பற்றிய கட்டுரையை தவறுதலாக புரிந்துகொண்டு ஏதோ பிதற்றினுரே, நீங்கள் ஏன் அதைப்பற்றி யாதொரு விஷய மும் எழுதவில்லை?

சென்னை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலிருந்து ஒருவர் தப்பி வந்து நம்மைப் பற்றி தெருவோடு பேசிக்கொண்டு போனால் அதற்கு நாம் என்ன செய்வோம்?

S. சிவகுமார், பொள்ளாச்சி

தமிழ் நாட்டில் ஒரு ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்காரர், தம்மை "ஹோமியோபதி சர்ஜன்" என்று கூறுகிறரே, ஹோமியோபதி வைத்திய முறையில் சர்ஜரியும் அந்த முறைப்படி உண்டா?

அவர் தன்னை "ஹோமியோ சர்ஜன்" என்று சொல்லிக்கொள்வதிலிருந்தே அவருடைய பரந்த அறிவைக் கணக்கிட முடியவில்லையா?

ஆஸ்பத்திரி திறப்பு விழா

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் பழைய மாணவர் **டாக்டர் என். தங்கராஜ் எம். ஐ. எச்.** அவர்கள் 1952ம் வருடம் ஜூன் மாதம் 11ம் தேதி **மதுரை ஜில்லா, காரிமேடு** என்னும் இடத்தில் "ஞான ஹோமியோ ஆஸ்பத்திரி" என்ற பெயரில் வைத்தியசாலை திறந்திருப்பதாயும் அதே கிராமத்தில் உள்ள பெரிய தனக்காரர் ஸ்ரீமான் சின்ன தேவர் அவர்கள் தலைமையில் மேற்படி வைத்தியசாலை திறப்பு விழா நடந்ததாகவும் அறிகிறோம்.

வைத்தியசாலை

சிதம்பரம் தாலுகா தில்லைநாயகபுரத்தில் டாக்டர் K. இராமமூர்த்தி அவர்களால் ஹோமியோபதி வைத்தியசாலை ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்யப்படுகிறது.

குன்டோபாஸ்

"குன்டோபாஸ்" என்பது பயோ கெமிஸ்டிரி முறையில் முக்கியமான ஐந்து பாஸ்பேட்டுகளையும் கொண்ட ஒரு முக்கிய ஔஷதம்.

ஒவ்வொரு "குன்டோபாஸ்" மாத்திரையிலும், கல்கேரியா பாஸ், பெர்ரம் பாஸ், மெக்னீஷ்யா பாஸ், காலி பாஸ், நேட்ரம் பாஸ் இவை ஐந்தும் சரிசமமாக உள்ளன. இது ஒரு சாதாரண கலப்பு ஔஷதம் அல்ல. ஆனால் இந்தப் பாஸ்பேட்டுகளின் சுயநிலைமையில் கலக்கப்பட்டு, அதன்மேல் விரியப்படுத்தப் பட்டது ஆகும்.

"குன்டோபாஸ்" அனேக வியாதிகளில் மிகவும் உபயோககரமாக இருக்கிறது. முக்கியமாக நரம்பு சத்துக் குறைந்த உபாதிகளில் இது நல்ல வேலை செய்யும். வலிப்புகள், காக்கை வலிப்பு, மூளைக் கோளாறுகள், ஞாபக மறதி, நீரிழிவு, மதுமேகம், ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளில் உபயோகிக்கலாம். பற்றுக்குறையும், அதிக அவசரமும் கலந்த இந்தக் காலங்களில், அதிக மூளை உழைப்புள்ள அனைவருக்கும் "குன்டோபாஸ்" ஒரு வரப்பிரசாதமே ஆகும்.

ஒவ்வொரு மாத்திரையும் 7½ க்ரெயின் எடை உள்ளது. இது பெரியவருக்கு ஒரு வேளை மருந்தாகும். சிறுவர்களுக்குப் பாதி அளவு, நாள் ஒன்றுக்கு மூன்று வேளைகள். கூடுமான வரையில் ஆகாரத்திற்கு முன்னதாக. 50 மாத்திரைகள் கொண்ட பாட்டில்கள் அழகான அட்டைப் பெட்டிகளில் கிடைக்கும்.

விலை ரூ. 3—0—0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் — மதராஸ்

ஹோமியோபதியின் சாரம்

Dr. K. சுப்ரமண்யன் போடிநாயக்கனூர் (மதுரை ஜில்லா)

இதற்கு முன்பு வெளியாகியுள்ள நமது ஹோமியோபதி பத்திரிக்கைகளில் ஹோமியோபதி முறைப்படி எவ்வளவு நாள்பட்ட நீடித்த பரம்பரை வியாதியாயிருந்தாலும் சரி, எவ்வளவு காலமாய் ஆறுமலிருந்த ரணமாயிருந்தாலும் சரி சௌகரியம் ஆகக்கூடிய நிலைமையிலுள்ள எப்படிப்பட்ட சிக்கலான உபாதியாயிருந்தாலும் சௌகரியம் செய்ய முடியும் என்பதையும், மேலும் மனித சமூகத்திலே இயற்கையாக ஏற்பட்டு வரும் பிரசவத்திலும் உயர்ந்த உபயோகமுள்ளது என்பதையும் தெளிவு படுத்தி விட்டோம். இனி தடுப்பு முறைகளில் எவ்வளவு தூரம் ஹோமியோபதி உபயோகப் படுகிறது என்பதையும் சற்று கவனிப்போம்.

சாதாரணமாக உலகத்தில் குழந்தையானது ஜெனிக்கும்போதே தன்னுடைய மூதாதையர்களுக்கு இருந்து வந்த அதாவது இதற்கு முன் பத்திரிக்கைகளில் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ள "ஸோரா' "சிபிலிஸ்" "சைக்கோஸிஸ்" என்று சொல்லப்பட்ட ஏதாவது ஒன்றினுலோ, அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவைகளினுலோ தாக்கப் பட்டு, அதன் காரணத்தால் ஏற்பட்ட பலவிதமான பலவீனங் களுடனேயேதான் ஜெனிக்கிறது என்பதையும் இதற்கு முன்னமேயே தெளிவுபடுத்தி விட்டோம் ஆனுல் இவ்வாறு உடன் பிறந்த அதாவது சரீரவாகு என்று சொல்லப்படும் ஆழ்ந்த வியாதியானது குறுகிய காலத்துக்கோ, அல்லது நீண்டகாலத்துக்கோ தான் இருப்பதை வெளியில் காட்டிக்கொள்ளாமலிருந்து விடுவது நாம் சர்வசாதாரண மாய் காணக்கூடிய ஓர் விஷயம் இதின் காரணம்

இயற்கையாகவே அமைந்துள்ள கெர்ப்பசிஸ்டத்தினுல் சிசு வானது பிறந்தவுடன் மூச்சுவிடுதலும் ரத்த அமுக்கமும் சற்று வேக மாகவே அதாவது பிராணவாயுவை அதிகமாகக் கொண்டுள்ள சுத்தமான வெளிக்காற்று சிசுவினது மூக்கில் நுழைந்தவுடன் தொண்டைக்குச் செல்கிறது. அங்கு காற்றின் வரவுக்காக இயற்கை யாகவே அமைந்துள்ள எபிகிளாடிஸ் என்ற தசை மூடி திறந்தே யிருக்கும் காற்று அதனுள் நுழைந்து அதன் அருகிலுள்ள "குறள் வளை" (சப்தபதம்) அதாவது சுவாசக்குழாய் வழியாகச் சென்று

மேல் மார்பின் பக்கத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிந்திருக்கிற "பிராங்கியல் ட்யூப்புகள்" அதாவது நுரையீரலுக்கு மேல்புறமாயுள்ள இரண்டு குழாய்போன்ற அவயவங்களின் வழியாக சுவாச கோசங்களில் போய்ச்சேர்ந்து அங்குள்ள சிறிய கிளைகளிலும் நுழைந்து காற்றுப்பையில் முடிகிறது.

இது இப்படி இருக்கும் அதே சமயத்தில் சரீரத்தின் வலது வென்றிகிலிலிருந்து இரண்டு பல்மனரி ஆர்டரிகளின் வழியாக ரத்தமும் வந்து சேருகிறது. இந்த சமயத்தில்தான் வெளியிலிருந்து வந்து சேர்ந்த பிராணவாயுவை அதிகமாகக் கொண்டுள்ள வெளிக்காற்றும் ஒன்றுய்க்கலந்து வெளிக்காற்றிலுள்ள பிராண வாயுவை ரத்தத்தில் விட்டு சுத்தப்படுத்தி அந்த ரத்தத்தில் உள்ள கரியமில வாயுவை தான் எடுத்துக்கொண்டு விடுகிறது. அந்த சமயத்தில் டயாபரம் என்னும் தசைப் படிதாவானது கீழே அமுங்கி வயிறு மார்புக்கூடு, முதலிய அவயவங்களை உப்பும்படியாகச் செய்து வைத்து இருக்கிறது.

இந்த சமயத்தில் டயாபரமானது தன்னுடைய இயற்கையான அமுக்கத்தைத் தளர்த்தி விடுவதால் இயற்கையாகவே சுருக்கம் ஏற்பட்டு அவ்விடமுள்ள கரியமிலவாயு வெளியேறி விடுகிறது. இதன் பிரகாரம் ரத்தத்தை சுத்தப்படுத்துவதற்காக வெளிக்காற்றிலுள்ள பிராணவாயு சரீரத்திற்குள் இழுக்கப்பட்டு ரத்தத்தில் விட்டு விட்டு ரத்தத்திலுள்ள அசுத்தமான கரியமிலவாயுவை வெளியேற்றும் வேலையை சாதாரணமாக வயது வந்தவர்களில் சுவாசாசயத்தைவிட சிசுவினுடைய சுவாசாசயங்கள் வெகு திறமையாகவும் சற்று வேகமாகவும் செய்கிறபடியால் சிசுவின் ரத்த ஓட்டமும் மூச்சு விடுதலும் சற்று வேகமாகவே இருக்கும். இது இயற்கையாகவே நடந்துவரும் விஷயம். இம்மாதிரியாக வேகமாய் ரத்தம் சுத்திகரிக்கப்படுவதால் சரீரவாகு என்று முன்சொல்லப்பட்ட பதுங்கி மறைந்து கிடக்கும் வியாதியானது அச்சரீரத்தில் நிலைகொள்ளமாட்டாமல் தத்தளித்து சரீரத்தின் வெளிப்புறங்களுக்கு விறட்டப்பட்டு நம் கண்களுக்கு தோற்றமளிப்பது இயற்கையாகவே நடந்துவரும் ஓர் விஷயம்.

இம்மாதிரியாய் இயற்கையின் காரணமாக வெளியேற்றப்பட்ட வியாதிதான் நமது கண்களுக்கு தோற்றமளிக்கப்பட்டதான சரீரவாகு என்று இதற்குமுன் சொல்லிவந்த பதுங்கி மறைந்து ஒளிந்திருந்த வியாதியை உண்மையில் வைத்தியம் செய்து சரியானபடி சௌகரியம் செய்யாமல் அமுக்கப்படும் சிகிச்சைகள் மூலம் மருந்தின்

எதிர்பலத்தால் சௌகரியம் செய்து விட்டதாக நினைத்து மறைத்து வைப்பது ஓர் அபாகரமான விஷயம். ஆகையால் இதை விளக்க ஒரு உதாரணம் சொல்லுகிறேன்.

கூடவே பிறந்து கூடவே வளர்ந்து மறைமுகமாகப் பதுங்கிக் கிடக்கும் ஆழ்ந்த வியாதிகளின் கூற்றுகளிலே முதன்மையாக உள்ள தான ''ஸோரா''வையே எடுத்துக் கொள்ளுவோம். இதனால் ஏற்படுத்தப்படும் குறிகள் சருமத்தில் ஏற்படும் சொறிசிறங்கு போன்ற சரும வியாதிகள், படைகள், தலைமயிர் உதிர்தல், அல்லது வழுக்கைத்தலை, சினப்புகள், பொடுகுகள் வயிற்றில் நாக்குப்பூச்சி உண்டாகுதல், மூக்கிலிருந்து ரத்தம் வருதல் பொதுவாக அடிக்கடி சிறிய காரணங்களினாலும் கூட ஏதாவது நோய் ஏற்பட்டுக் கொண்டேயிருத்தல் இவைகளெல்லாம் பொதுவாக ''ஸோராவின்' கோர உருவங்கள் என்பதையும் இதற்கு முன்பே சொல்லியிருக்கிறோம். இவைகள் உண்டாவதின் காரணம் இவைகளை உண்டாக்கும் தன்மையுள்ள ஒருவித விஷம் அக்குழந்தையின் ரத்த ஓட்டத்தில் ஏற்கனவே இருந்து வருகிறது. அப்படியுள்ள விஷத்தன்மையை இயற்கை சக்தியால் ரத்தமானது சுத்திகரிக்கப்படும் சமயம் சரீரத்தில் நிலைகொள்ள மாட்டாமல் சரீரத்தின் வெளிப்புறமாகிய சருமத்தில் தோன்றி உபத்திரவத்தை உண்டாக்குவதும் இயற்கையாகவே நம் சரீரத்தில் ஏற்படக்கூடிய விஷயங்கள்.

இம்மாதிரியாக இயற்கையின் காரணமாய் சரீரத்தில் வியாதி ஏற்பட்டு வெளியில் கிளம்பிய ஒரு வியாதிக்கு வைத்தியம் செய்ய வேண்டுமானால் அதன் மூலகாரண தத்துவத்தை அனுசரித்தும், டைனமிக் (Dynamic) தத்துவ அணுக்களால் ஏற்படுத்தப்படும் குறி குணங்களுக்கும் வியாதியின் குணங்குறிகளுக்கும் ஒற்றுமையாகவும் ரத்தத்தை சீக்கிரமாக சுத்தம் செய்ய உதவியாக இருக்கும்படியாகவும் உள்ள நல்ல மருந்துகளைக் கொடுத்தால் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக ரத்தசுத்தம் ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வியாதிக்குறிகள் வெளியில் அதிகமாகத் தோற்றமளிப்பதும் இயற்கைக்கு ஒத்த விஷயங்கள்தான். இது பார்ப்பதற்குச் சிறிது கஷ்டமாய்த்தான் தோன்றும். இதைப் பொருமையுடன் சகித்து மேல் பூச்சு மருந்துகளால் உள் அமுக்கப்படும் சிகிச்சை செய்யாமல் அதாவது மருந்தின் முதல் குணமாகிய பிரைமெரி ஆக்ஷனை (Primary action) உபயோகிக்காமல் குணப்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதில் சிறிது காலதாமதம் ஏற்படத்தான் செய்யும்.

ஆயினும் சீக்கிரமே ரத்தம் சுத்திகரிக்கப்பட்டு ஓர் பிரமாண்டமான பெரிய விருக்ஷத்தின் ஆணிவேர் இத்துப்போய் விட்டால் மேலேயுள்ள அம்மரத்தின் மிகப்பெரிய பாகங்களெல்லாம் எப்படி காய்ந்து, உலர்ந்து, உதிர்ந்து நசித்துப்போய் விடுகின்றனவோ அம்மாதிரியாக வெளியில் தோன்றி உபத்திரவப்படுத்தி வந்த வியாதிக்குறிகளும் காலக்கிரமத்தில் தானுகவே மறைந்து விடுவதை நாம் காணலாம்.

ஆனல் அம்மாதிரியாக ஏற்பட்ட வியாதிக்குறிகளை அதன் கோர உருவத்தை காண மனம் சகிக்காமல் மேல்பூச்சு மருந்துகளை உப யோகித்து சீக்கிரமே சொஸ்தம் செய்து விட்டதாக நம்பி மேல் தோற்றமான வியாதிக்குறிகளை மேலாக மறைத்து விடுகிருர்கள். அப்படி மறைத்து வைக்கப்பட்ட வியாதியின் விஷம் மறுபடியும் ரத்த ஓட்டத்தில் சேர்ந்து விடுகிறது. ஆகவே இதிலிருந்து வியாதியை வெளியில் போகவிடாமல் தடைசெய்து வெகு பலமாக மூடி விட்டோம் என்பது தெளிவாகும். இம்மாதிரியாகவே பலதடவை களிலும் வியாதிக்குறிகளை சொஸ்தம் செய்து விட்டதாகவே நினைத்து கொண்டு மேலும் மேலும் சக்திவாய்ந்த மாற்று மருந்துகளை உப யோகித்து வருவது நம் நாட்டினரிடையே உள்ள பழக்கவழக்கங் களில் ஒன்ருகும்.

ஆனல் அப்படி வியாதியை மறைத்து வைப்பதற்காக உப யோகிக்கப்பட்ட மாற்று மருந்துகளின் சக்தி அதாவது மருந்தினல் உண்டாக்கப்பட்ட செயற்கை வியாதியானது ஏற்கனவே சரீரத்தில் மறைந்து கூடவே இருந்து வந்த இயற்கை வியாதியைவிட அம்மருந்தி னல் உண்டாக்கப்பட்ட செயற்கை வியாதி அதிக பலமுள்ளதாய் இருப்பதினல் அந்த செயற்கை வியாதியின் பலம் எவ்வளவு நாட்கள் நீடித்து இருக்கின்றதோ, அவ்வளவு நாட்கள் வரையிலும் இயற்கை யில் ஏற்பட்டு இருந்து வந்த வியாதியானது தான் இருப்பது தெரியா மல் ஒரு குறுகிய காலமோ அல்லது நீண்டகாலமோ மறைந்து இருக்கலாம். இம்மாதிரியாகவே மற்ற ''சிபிலிசும்'' ''சைக்கோஸிஸ்'' சும் ஏன் ''டியூபர்குலாஸிஸ்'' ''கன்சர்'' முதலியவைகளும் கூட இம்மாதிரியாகவே மறைந்துபோய் சிலகாலம் தோன்ருமலே அதாவது நமக்குத் தெரியாமலே இருந்து வரலாம்.

ஆனல் அப்படி மறைந்து பதுங்கிக் கிடக்கும் சரீரவாகு என்று முன்பு சொல்லி வந்த ஆழ்ந்த வியாதியானது ஏதாவது ஒரு சந்தர்ப் பத்தில் ஏதேனும் வெளிக்காரணங்களால் சரீரத்தில் ஏற்படுத்தப்

பட்டிருந்த செயற்கை வியாதியானது இதற்கு முன்பு ஏற்கனவே சரீரத்தில் மறைமுகமாக இருந்து வருகிற இயற்கையாக உள்ள வியாதியினுடைய பலத்துக்கு குறைந்து விட்டால் அந்த இயற்கை வியாதியானது உடனே தன்னுடைய சுயமான உண்மை உருவத்துடன் வெளியில் தோன்றி தன்னுடைய கோரதாண்டவத்தை ஆரம்பித்து விடும். இவ்வாருக சரீரவாகு என்று சொல்லப்பட்டு வருகிற ஆழ்ந்த ஒரு வியாதியின் நிலமையானது நாம் பிறக்கும்போதே அதுவும் கூடவே பிறந்து விடுகிறது என்பதையும் பிற்காலத்தில் அவ்வியாதியேதான் மூலகாரணமாக இருந்துகொண்டு சரீரத்திலேற்படும் பல்வேறு வியாதிகளுக்கும் பலவிதமான உபத்திரவங்களுக்கும் மூலகாரணமாய் தலைமை வகித்து வருகிறது என்பதையும் ஹோமியோபதியின் தந்தையும் குருவுமான டாக்டர் சாமுவேல் ஹானிமான் அவர்கள் சுமார் 110 ஆண்டுகளுக்குமுன்பு ஜெர்மனி தேசத்தில் எழுதி வைத்தார் என்ற உண்மை ஓர்புறமிருக்க இன்னும் பல நூற்ருண்டுகளுக்கு முன்பு இருந்துவந்த நம்முடைய முன்னேர்களும் அறிந்துதான் இருந்தார்கள் என்பதிலும் சிறிதும் சந்தேகிக்க வேண்டியதில்லை ஆகையினுலேதான்

> உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்
> உடன்பிறந்தே கொல்லும் வியாதி

என்று நமது பழங்கால பெரியார்களும் எழுதி வைத்திருக்கின்ருர்கள்.

(தொடரும்)

ஸ்திரீகளின் சகல கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும்

"சோதரி"

நிகரற்ற ஔஷதம்

விபரங்களுக்கு:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

ஹோமியோபதியின் வேதாந்தம்

(பம்பாய் டாக்டர் S. N. K. மூர்த்தி)

ஸ்லோகம் 180

இந்த நிலைமையில், எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு நல்ல முறையில் பொறுக்கி எடுக்கப்பட்ட மருந்தானது, மேலே கூறிய காரணங்களால், வியாதிபஸ்தரின் எல்லாக் குறிகளுக்கும் ஒத்ததாக இல்லாததினால் (சில குறிகளுக்கு மாத்திரமே பொருத்தமாயிருப்பதால்) கொடுக்கப்பட்டவுடன், வேறு சில புதுக்குறிகளைத் தோற்றுவிக்கலாம்; இவ்வாறு தோற்றுவிக்கப்படும் புதுக் குறிகள் இப்பொழுது கொடுக்கப்பட்ட மருந்தினால் ஏற்பட்டதாகத் தோன்றினாலுங்கூட உண்மையில் அவ் வியாதியஸ்தருக்கு உள்ள வியாதியின் குறிகளே ஆகும். எனினும் இவை இதற்கு முன் ஏற்படாத குறிகளாகவே இருக்கலாம், அல்லது ஏற்கனவே மிகவும் குறைந்த அளவில் இருந்த குறிகளாகவும் இருக்கலாம்.

ஸ்லோகம் 181

இதனால் கொடுக்கப்பட்ட ஔஷதத்தினால்தான் புதுக் குறிகள் ஏற்பட்டுவிட்டன வென்று நினைக்கவேண்டாம். புதுக் குறிகளை வெளியிடும்படிசெய்தது கொடுக்கப்பட்ட ஔஷதத்தின் வேலைதான் என்றாலும், குறிகள் வியாதியினுடையவையே என்பது கவனிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு ஏற்பட்ட குறிகளையும், ஏற்கனவே உள்ள குறிகளில் பாக்கி உள்ளவையும் ஒன்றாகச் சேர்த்து அவை அனைத்திற்கும் பொருத்தமான ஒரு ஔஷதத்தைத் தேர்ந்தெடுத்து மேற்கொண்டு சிகிச்சை செய்வது முறை.

ஸ்லோகம் 182

இப்படியாகக் குறிகள் குறைவாயிருந்ததினால் சுமாராக ஔஷதம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டிய

அவசிய மேற்பட்ட கேசுகளில், இதே ஔஷதம் மற்றக் குறிகளையும் வெளியே கொண்டுவருவதற்கு உதவி, மேற்கொண்டு எல்லாக் குறிகளுக்கும் சரியான ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவுகிறது.

ஸ்லோகம் 183

ஆகவே முதலாவது வேளையாகக் கொடுத்த ஔஷதம் சரியான பலனை அளிக்காவிடில், வியாதியையும் அதன் குறிகளையும் மறுபடியும் புதிதாகக் கவனித்து, தற்சமயம் இருக்கும் குறிகளுக்கு ஒத்த ஹோமியோபதி ஔஷதத்தைக் கண்டு பிடித்துக் கொடுக்கவேண்டும். பல குறிகள் புதிதாகத் தோன்றி இருக்குமாதலின் சரியான ஔஷதத்தைக் கண்டுபிடிப்பதற்கு இது மிகவும் உதவியாகவும் இருக்கும்.

ஸ்லோகம் 184

இதுபோலவே ஒவ்வொரு வேளை ஔஷதத்திற்குப் பிறகும், பாக்கி இருக்கும் வியாதியின் நிலைமை நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, குறிகளைத் திரட்டி அதற்குத் தகுந்த ஹோமியோபதி ஔஷதத்தைக் கொடுக்கவேண்டும். இதுபோலவேதான் வியாதி பூரண சௌக்கியம் அடையும் வரையில் செய்ய வேண்டும்.

(தொடரும்)

பர்மா, மண்டலே டாக்டர் **M. பால்** M. B.
அவர்களால் எழுதப்பட்ட

'ஹோமியோபதி குடும்ப வைத்திய சிகிச்சை'

(இரண்டாவது பதிப்பு)

வெளிவந்துவிட்டது

★

விஷயங்களை நல்ல முறையில் விளக்கி
உயர்ந்த காகிதத்தில் நன்ருக அச்சிடப்பட்டிருக்கிறது.

பாக்கெட் சைசில் கெட்டியாக காலிகோ பைண்ட்
செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும்
ஒவ்வொரு ஹோமியோபதி டாக்டருக்கும்
மிக அவசியமான ஒரு புத்தகம்.

★

விலை ரூ. 2—0—0 தபால் செலவு தனி

பிரசுரகர்த்தர்:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம் (தென் இந்தியா)

Edited, Printed & Published by Dr V. R. MURTY at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam.